# 14

# நாவைப் பேணுவோம்

ஒரு நாள் ஸஹாபாக்களுடன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அச்சபையில் நபி (ஸல்) அவர்களின் உற்ற நண்பரான அபூபக்ர் (ரழி) அவர்களும் இருந்தார்கள். அங்கு வந்த ஒருவர், அபூபக்ர் (ரழி) அவர்களைக் கடுமையாகத் திட்டித் துன்பத்திற்குள்ளாக்கினார். அபூபக்ர் (ரழி) எதுவும் பேசாமல் மௌனம் காத்தார்கள். இரண்டாவது தடவையாகவும் அம்மனிதர் திட்டினார். அப்போதும் அவர்கள் மௌனமாகவே இருந்தார்கள். அவர் மூன்றாம் முறையாகவும் அபூபக்ர் (ரழி) அவர்களைக் கடுமையாகத் திட்டினார். அப்போது அபூபக்ர் (ரழி) அவர்கள் அம்மனிதருக்கு மறுப்புத் தெரிவித்தார்கள். உடனே நபி (ஸல்) அவர்கள், அச்சபையிலிருந்து எழுந்து சென்றுவிட்டார்கள். இதைக் கண்ட அபூபக்ர் (ரழி), நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று, 'அல்லாஹ்வின் தூதரே! என்மீது கோபப்பட்டா எழுந்து செல்கிறீர்கள்?' என வினவினார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'அந்த மனிதர் உம்மைத் திட்டுவதற்குப் பயன்படுத்திய வார்த்தைகளை வானிலிருந்து இறங்கிய மலக்குகள் பொய்யாக்கிக் கொண்டிருந்தார்கள். நீர் விடையளித்த போது அங்கு ஷைத்தான் பிரசன்னமானான். ஷைத்தான் இருக்கும் இடத்தில் நானும் இருக்காது எழுந்து வந்துவிட்டேன்' எனப் பதிலளித்தார்கள். (அபூதாவூத்)

ஒரு முறை ஆயிஷா (ரழி) அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உட்கார்ந்திருக்கும் போது அங்கு ஸபிய்யா (ரழி) அவர்கள் வந்தார்கள். அவர்களைக் கண்ட ஆயிஷா (ரழி) அவர்கள், ஸபிய்யா கட்டையானவர் என ஏதேதோ குறையாகச் சொன்னார்கள். அதைச் செவியுற்ற நபி (ஸல்) அவர்கள் ஆயிஷாவைப் பார்த்து, 'கடலில் போட்டாலும் கடல் நீர் அசுத்தமடையும் தன்மை கொண்ட வார்த்தையைப் பிரயோகித்துவிட்டீர்!' எனக் கண்டித்தார்கள். (அபூதாவூத், திர்மிதி)

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஸஹாபாக்களிடம் 'புறம் என்றால் என்ன எனத் தெரியுமா?' எனக் கேட்டார்கள். அதற்கு ஸஹாபாக்கள், 'அல்லாஹ்வும் அவனது தூதருமே அறிவார்கள்!' என்றனர். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'உனது சகோதரன் வெறுக்கின்ற, அவனைப் பற்றிய ஒன்றைக் கூறுவதாகும்' என்றார்கள். அப்போது ஒரு ஸஹாபி, 'நான் கூறுவது அவரிடம் இருந்தால் அது பற்றி என்ன கருதுகிறீர்கள்?' எனக் கேட்டார். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நீர் சொல்வது அவரிடம் இருந்தால் அது புறமாகும். இல்லாவிட்டால் அது அவதூறு ஆகும்' என்றார்கள். (முஸ்லிம்)

ஒரு நாள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'உங்களில் எனக்கு மிக விருப்பமானவரும் மறுமையில் எனக்கு அருகாமையில் உட்கார்ந்திருப்பவரும் நற்பண்புள்ளவரே. உங்களில் எனக்கு மிக கோபத்திற்குரியவரும், மறுமையில் என்னிடமிருந்து மிகத் தூரத்தில் இருப்பவரும், அதிகமாகவும், நீண்ட நேரமாகவும் பேசுபவர்களும் 'முதபய்ஹிகூன்'களுமாவர்' என்றார்கள். அதற்கு ஸஹாபாக்கள் 'அப்படியென்றால், யார் அவர்கள்?' எனக் கேட்டார்கள். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'வார்த்தைகளால் பெருமையடிப்பவர்கள்' என்றார்கள். (திர்மிதீ)

ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்அவர்களிடம் 'வெற்றி' எது எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், 'நாவைப் பேணிக்கொள்! வீட்டை விரித்துக் கொள். உனது குற்றங்களுக்காய் அழு என்றார்கள்' (திர்மிதீ)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணுலகிற்கு மிஃராஜ் பயணம் சென்றபோது, நரகில் ஒரு கூட்டத்தைக் கண்டார்கள். அவர்கள் மனித மாமிசத்தைப் புசித்துக் கொண்டும், செம்பினாலான நகங்களால் தமது முகங்களையும் நெஞ்சுகளையும் விராண்டி காயப்படுத்திக் கொண்டுமிருந்தார்கள். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்களிடம், 'இவர்கள் யார்? ஏன் இவ்வாறு தண்டிக்கப்படுகின்றனர்?' எனக் கேட்டார்கள். அதற்கு ஜிப்ரீல் (அலை), 'இவர்கள்தான் உலகில் புறம் பேசி மனிதர்களின் மாமிசத்தை உண்டவர்கள்; அவர்களின் மானத்தில் விளையாடியவர்கள்' எனக் கூறினார்கள். (அபூதாவூத்)

ஒரு மனிதர் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் பதியப்படுகின்றன; அவை விசாரணைக்குட்படுத்தப்படுகின்றன. அதனால் வார்த்தைப் பிரயோகங்களில் அடக்கமும் கட்டுப்பாடும் தேவை என இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

ஒவ்வொரு நாள் காலையிலும் மனிதன் எழுந்துவிட்டால் அவனது உறுப்புக்கள் அனைத்தும் நாவைப் பார்த்து, 'அல்லாஹ்வை அஞ்சிக் கொள்! உன்னில்தான் எங்கள் நிலை தங்கியுள்ளது. நீ ஒழுங்காக இருந்து கொண்டால் நாங்களும் ஒழுங்காக இருந்து கொள்வோம். நீ தவறிவிட்டால் நாங்களும் தவறிவிடுவோம்! என எச்சரிக்கின்றன' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்)

இச்சம்பவங்கள் அனைத்தும் முஸ்லிமின் நாவொழுக்கம் பற்றிப் பேசுகின்றன. நல்ல விடயங்களை மாத்திரமே பேச வேண்டும் புறம், கோள், திட்டுதல், குறை கூறுதல், பட்டப் பெயர் சூட்டுதல் போன்ற தீய, பாவமான செயல்களைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். எனவே ஒவ்வொரு முஸ்லிமும் இஸ்லாத்தின் போதனைகளுக்கு ஏற்ப நாவைப் பேணிக்கொள்வது கடமையாகும். ஏனெனில் 'நாவைப் பேணுபவனுக்கு சுவர்க்கத்தைப் பெற்றுத்தர நான் பொறுப்பு!' என்று நபியவர்கள் வாக்குறுதிக்கு அளித்துள்ளார்கள். 'அல்லாஹ்வையும் மறுமையையும் ஈமான் கொண்டவர் பேசினால் நல்லதைப் பேசட்டும் அல்லது (வாய் மூடி) மௌனித்து இருக்கட்டும்' (புஹாரி, முஸ்லிம்) என்று அறிவுரை பகர்ந்துள்ளார்கள். இவ்வுபதேசங்களைக் கருத்தில்கொண்டு இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவோம்!

**செயற்பாடு**

'நாவின் விபரீதங்கள்' எனும் தலைப்பில் சிற்றுரையொன்றை முன்வைக்குக.